<u>**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**</u>

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. புருஷோத்தம்மன் | அசல் வழக்கு எண். | 109/2015 |
| த/பெ. | - | சீனுவாசன் | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

27.04.2026

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**</u>

1. வாய்மொழி பாகம் ஏற்படாததால் தான் அது குறித்து வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. வாய்மொழி பாகத்திற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் வாய்மொழி பாகம் ஏற்பட்ட தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் "வாய்மொழி பாக பத்திரத்தின் படி" என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அது குறித்து ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. "வாய்மொழி பாக பத்திர படி" என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். வில்லங்கத்தில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் பற்றி குறிப்பிடப்பட்டு இருந்ததா என்றால் குறிப்பிடப்பட்டு இருந்தது. அந்த வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. வாய்மொழி பாகத்தில் 5 ம் பிரதிவாதியின் தந்தைக்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் எந்த பாகமும் ஒதுக்கவில்லை. பாகம் விட்டு கொடுப்பதற்கு எந்த ஏற்பாடும் செய்யவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகம் குறித்து ஊரில் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். ஊரில் யாரையெல்லாம் விசாரித்தேன் என்று வழக்குரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது.

3. வா.சா.ஆ.2 ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் நிபந்தனைகள் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ.2 ஆவணம் எழுதபட்ட பிறகு எப்போது இரத்து செய்யப்பட்டது என்றால் ஒரு வருடத்திற்குள்ளே இரத்து செய்யப்பட்டுவிட்டது. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. ஒரு செட்டில்மெண்ட் பத்திரத்தை இரத்து செய்வதற்கு நீதிமன்றத்திற்கு தான் அதிகாரம் உண்டு என்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தை வாசுதேவமுதலியார் இரத்து செய்வதற்கு அதிகாரம் இல்லை என்றால் தானசெட்டில்மெண்ட் எழுதவதற்கே அவருக்கு அதிகாரம் இல்லை.

4. ஊரில் பஞ்சாயத்து நடைபெற்றது பற்றி வா.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாய்மொழி பஞ்சாயத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாய்மொழி பாகத்தில் யாருக்கு எவ்வளவு பூமி ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், கல் நட்டு கொடுத்தார்கள். வாய்மொழ பாகத்தில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவர்கள் சொல்லி தான் தெரியும். எப்போது எனக்கு தெரிய வந்தது என்றால் சொத்தை விலை பேசும் போது எனக்கு தெரிய வந்தது.

பிரதிவாதி தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif

Vanur.